# தலைவாசல் Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 53 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | நவம்பர் 25, 2020






## நிவர் புயல்: மழை வெள்ளத்தால் பருத்தித்துறையில் 11 வீடுகள் பாதிப்பு!

சீரற்ற காலநிலையால் பெய்துவரும் மழை வெள்ளத்தால் பருத்தித்துறையில் 11 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில் அதிகாலை 5.00 மணி வரையான 24 மணி நேரத்தில் வட மாகாணத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 103 மி.லீட்டர் மழைப் பொழிவு பருத்தித்துறையில் ஏற்பட்டிருந்தது.

இதனால் தாழ்வான பகுதிகள் மற்றும் 03


## கிளிநொச்சியில் ஐவருக்கு கொரோனா தொற்று!

### 600 பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இன்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில்,

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் தொற்றுக்கு உள்ளானவரின் மருமகன், அவருடைய கடையில் பணியாற்றிய இளைஞர் 03



## கொம்பனித் தெருவில் ஒரே நாளில் 90 பேருக்கு கொரானா

கொம்பனித் தெருவில் ஒரேநாளில் 90 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நேற்றைய தினம் 458 கரோனா நோயாளிகள் பதிவாகினர். அவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் 259 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாக கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அவர்களில் கொம்பனித் தெருவைச் சேர்ந்த 90 பேர் அடங்குவதாகவும் குறித்த செயற்பாட்டு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கண்டி பாடசாலைகளுக்கு பூட்டு

கண்டி நகர எல்லைக்குட்பட்ட சகல பாடசாலைகளையும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை மூடுவதற்கு தீர்மானித்ததாக, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையில், மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வது உரிய நடவடிக்கை இல்லையென, பெற்றோர் தொடர்ச்சியாக 03

## பெண்களுக்கு எதிரான வன்முறை யாழில் 1011 முறைப்பாடு

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்துள்ளதாக மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் சுஜித்குமார் லேணுகா ராணி கூறியுள்ளார்.

பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாள் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வு நேற்று காலை 10.00 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. 03

## குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருக்கு கொரோனா

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து, மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர், அங்கிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. 03

## பொதுமக்கள் ஒன்றுகூடி நினைவேந்த முடியாது

### யாழ். மன்று கட்டளை

பொது மக்கள் பொது இடங்களில் ஒன்றுகூடி நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாது என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

மாவீரர் நாள் நினைவேந்தலை தடை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இந்த கட்டளையை வழங்கியுள்ளது.

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் மற்றும் 03






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்



## கிளிநொச்சி மாவட்டச் செயலம் முன் தனி மனிதப் போராட்டம்

கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக ஒருவர் இன்று காலை போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தனது காணியின் ஊடாக கழிவு நீர் வாய்க்கால் ஒன்றை அமைக்க கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேளமாலிகிதன் முற்பட்டதாகவும் அதற்கு அரசாங்க அதிபர் தெளிவான பதிலை வழங்க வழங்க வேண்டும் என தெரிவித்தே குறித்த நபர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இன்றைய தினம் மாவட்ட அரசாங்க அதிபர் இல்லாத நிலையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன் குறித்த நபருடன் கலந்துரையாடினார்.

தீர்மானம் எடுக்க கூடியவர் அரசாங்க அதிபர் என்பதால் அவர் வருகை தந்ததும் அவருடன் பேசி தீர்வை பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்த நிலையில் குறித்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

# உள்நாட்டு விசாரணைக்கு இணங்கி இருக்காவிட்டால் சர்வதேச விசாரணை இடம்பெற்றிருக்கும்



இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து ஆராய உள்நாட்டு விசாரணைக்கு இணங்கி இருக்காவிட்டால் சர்வதேச விசாரணை இடம்பெற்றிருக்கும் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்று நிரைவேற்றப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இன்று (புதன்கிழமை) இடம்பெற்றுவரும் அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டம் மீதான குழுநிலை விவாததில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறியது. இருப்பினும் தற்போது ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவாகியுள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் அதே நிலைமை தொடராது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதிகார பகிர்வினை வழங்கினால் நாடு பிளவுபடாது என்றும் மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதால் அனைவரும் ஒற்றுமையாக இருக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.



### தினம் ஒரு ஆரோக்கிய தகவல்-6

**நல வாழ்விற்கு குடிநீர்**

தேவையான அளவு குடிநீர் அருந்துதல் ஆரோக்கியமான வாழ்விற்கு அவசியமானது.

நாளாந்தம் அருந்த வேண்டிய குடிநீரின் அளவு வயதின் அடிப்படையில் வேறுபடும்.

1- 5 வயதுடையோர் 750 மி.லீ - 1 லீ குடிநீரும், 6-10 வயதுடையோர் 1 லீ- 1.5 லீ குடிநீரும், 11-18 வயதுடையோர் 1.5 லீ-2 லீ குடிநீரும் நாளாந்தம் அருந்த வேண்டும்.

வளர்ந்தவர்கள் அருந்த வேண்டிய குடிநீரின் அளவை உடல் நிறையும் செய்யும் வேலையின் அளவும் தீர்மானிக்கிறது.

அண்ணளவாக வளர்ந்தவர்களுக்கான நாளாந்த நீர் தேவையை உடல் நிறையை (கி.கி) 30 ஆல் வகுப்பதன் மூலம் கணிப்பிடலாம்.

உங்களுக்கு நாளாந்தம் தேவையான அளவு குடிநீரை அருந்துவதனை உறுதிப்படுத்துங்கள்.

**வைத்திய கலாநிதி**
**கோ. றஜீவ்**



# யாழ் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் திறந்து வைப்பு

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உலக வங்கி அனுசரணையுடன் புத்தாக்க மின்கல (பற்றரி) தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் இரண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் துறைகள் இணைந்து முன்னெடுக்கும் பற்றரி ஆராய்ச்சிக்கென நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடங்களின் திறப்புவிழா இன்று காலை இடம்பெற்றது. யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், முன்னாள் விஞ்ஞான பீடதிபதியுமான பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா இந்த ஆய்வு கூடங்களைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன், ஏகெட் திட்டத்தின் நிதிப் பணிப்பாளர் க. கனகரட்ணம், பௌதிகவியல் துறைத் தலைவர் கலாநிதி தி. பத்மதாஸ், இரசாயனவியல் துறைத் தலைவர் கலாநிதி பி.ஐங்கரன், மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மிகவும் எளிமையாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அரிசோனா அரச பல்கலைக்கழகம் - அமெரிக்கா, சால்மேர்ஸ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் - சுவீடன், தேசிய விஞ்ஞான நிறுவனம் - கண்டி, விஞ்ஞானபீடம் யாழ் பல்கலைக்கழகம் என்பவற்றின் கூட்டு ஆராய்ச்சித் திட்டமாக எளிதில் கிடைக்கக்கூடிய சோடியம் மற்றும் மக்னீசியத்தினை பயன்படுத்தி புத்தாக்கமாக பல சவால்களை எதிர்கொண்டு மேம்பாடான உற்பத்திச் செலவு குறைந்த எளிதில் கிடைக்கக்கூடிய பற்றரிகளின் தொழில்நுட்பமானது வடிவமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 15 ஆயிரம் பேர் குணமடைந்தனர்



இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை கடந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 485 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 447ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 967 ஆக காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 426 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 601 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 94 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரிஷாட் பதியுதீன் பிணையில் விடுதலை!



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு பிணை வழங்கி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினத்தில், புத்தளம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்த மக்களை, அரச பேருந்துகள் ஊடாக மன்னார் பகுதிக்கு அழைத்து சென்று வாக்களிக்க வைத்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி, குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட ரிஷாட் பதியுதீனை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ரிஷாட் பதியுதீன் பிணை கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு கடந்த 13ஆம் திகதி நிராகரிக்கப்பட்டதுடன், வழக்கு விசாரணைகள் இன்றைய தினம் வரையில் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தலில் இருந்து விடுபட்ட பகுதிகள் மீண்டும் முடக்கப்படலாம்

தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால், குறித்த பிரதேசங்களை மீண்டும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படமாட்டார்கள் என்று கூற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அவர்களின் தொடர்புகள் குறித்து ஆராய்ந்த பின்னர் பெருமளவானவர்களுக்கு பாதிப்பு ஏற்படுமென கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய தேவையேற்படின் மீண்டும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# யாழ்ப்பாண கலாசார மண்டபத்துக்கு மாநகர சபை உறுப்பினர்கள் விஜயம்!

இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் யாழ்ப்பாண கலாசார மண்டபத்துக்கு யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் இன்று (புதன்கிழமை) விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் தலைமையில் சென்ற உறுப்பினர்களோடு, யாழ். மாநகர சபையின் ஆணையாளர், செயலாளர், பிரதம கணக்காளர் மற்றும் பிரதம பொறியியலாளர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது, கலாசார மண்டபத்தின் அதிகாரிகள் அங்கு அமைந்துள்ள கட்டடங்கள், அரங்குகள் பற்றி விளக்கமளித்ததோடு, அங்குள்ள சகல பகுதிகளையப் பற்றியும் உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தனர்.

கலாசார மண்டபத் தொகுதியினுள் அமைந்துள்ள மூன்று கட்டடத் தொகுதிகள் மற்றும் 11 மாடிகளைக் கொண்ட பயிலரங்கு, தளங்களையும் உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

# பருத்தித்துறை நீதிமன்றின் கட்டளை நாளை

பருத்தித்துறை நீதிமன்ற நியாயதிக்கத்துக்கு உள்பட்ட பகுதிகளில் நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த தடைவிதிக்கக் கோரி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரால் மீளவும் விண்ணப்பங்கள் செய்யப்பட்ட நிலையில் கட்டளைக்காக நாளைய தினம் திகதியிடப்பட்டுள்ளன.

இன்று முற்பகல் தாக்கல் செய்யப்பட்ட இந்த விண்ணப்பங்கள் பிற்பகல் மன்றில் அழைக்கப்பட்ட நிலையில், கட்டளைக்காக நாளைய தினம் திகதியிடப்பட்டது.

இந்த விண்ணப்பங்கள் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும்

நெல்லியடி ஆகிய 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பிரதிவாதிகளாக முன்னர் தாக்கல் செய்யப்பட்டு மீளப்பெறப்பட்ட விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டவர்களின் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னதாக 3 விண்ணப்பங்கள் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீளப்பெறப்பட்டிருந்தன. என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண் உத்தியோகத்தர் மீது தாக்குதல் : முகாமையாளர் கைது

நிர்வாக உதவியாளர் ஒருவரை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உடுகம்பொல அலுவலகத்தின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலுவலகமொன்றில் பணிப்புரியும் பெண் மீது உயர் அதிகாரியொருவர் தாக்குதல் நடத்துவதாக தெரிவிக்கப்படும் காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியானது.

இந்த நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பெண்ணை தாக்கிய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பிடப்படுகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நிவர் புயல்...

தற்காலிக குடிசைகளுக்கு வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதையடுத்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவின் யா/404 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கலப்பனாவத்தை, தும்பளையில் 11 வீடுகள் பாதிப்படைந்துள்ளன.

காற்று மற்றும் மழைத் தாக்கத்தினால் கூரைத் தகரங்கள் சேதமடைந்தும், வெள்ள நீரால் சூழப்பட்டும் குறித்த 11 வீடுகள் பாதிப்பினை சந்தித்துள்ளன. இவ் அனர்த்தத்தினால் அவ்வீடுகளில் வசித்துவருபவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குற்றப்புலனாய்வு...

சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்கள்...

கோப்பாய் பொலிஸாரினால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் விண்ணப்பம் செய்யபட்டது.

இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை 106ஆம் பிரிவின் பொதுத் தொல்லை என்ற வியாக்கியனத்தின் கீழ் இந்த விண்ணபத்தை யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களில் நினைவேந்லை நடத்துவதற்கு தடை கேட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், க.சுகாஷ், மாநகர சபை உறுப்பினர்கள் வரதாசா பார்த்திபன், மயூரன் உள்ளிட்ட 37 பேருக்கு எதிராக தடைக் கட்டளை வழங்குமாறும் இந்த விண்ணப்பம் செய்யப்பட்டது.

அந்த அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைகூருவதற்காக நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

அந்த மாவீர்ர் நாள் நிகழ்வுகளைத் தடுக்கும் வகையில் கட்டளை வழங்கவேண்டும்" என்று பொலிஸார் விண்ணபத்தில் கேட்டிருந்தனர்.

அத்துடன் கோவிட் -19 தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தையும் பொலிஸார் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

அதனடிப்படையில் வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போது வழக்கின் பிரதிவாதிகளான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், கே.சுகாஷ் உள்ளிட்டோர் முன்னிலையாகி தமது ஆட்சேபனையை முன்வைத்தனர்.

தொடர்ந்து நேற்று செவ்வாய்க்கிழமை வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது, ஏனைய பிரதிவாதிகள் சார்பில் மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா முன்னிலையாகி நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இந்த நிலையில் வழக்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

வழக்குத் தொடுனரான பொலிஸார் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த பிரதி மன்றாடியார் அதிபதிகள் பிரபாகரன் குமாரரட்ணம், ஹரிப்பிரியா ஜயசுந்தர மற்றும் மூத்த அரச சட்டவாதி ஜனக பண்டார ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நாட்டில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதிலிருந்து உயிரிழந்தவர்களை நினைவுகூர அனுமதியளிக்க முடியாது என்று தமது சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

போரில் உயிரிழந்த வீரர்கள் உறவுகளை நினைவேந்துவது மரபு என பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் சமர்ப்பணம் செய்தனர். இருதரப்பு சமர்ப்பணங்களும் சுமார் 3 மணித்தியாலங்கள் இடம்பெற்றது. இந்த நிலையில் வழக்கின் கட்டளையை இன்று மாலை 3 மணிக்கு நீதிமன்றம் வழங்கியது.

## பெண்களுக்கு...

இதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,கடந்த 2019 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் இருந்து

1076 பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. எனினும் 2020 ஆம் ஆண்டு இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை

1011 பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் யாழ். மாவட்டத்தில்

பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்த நிலை காணப்படுகின்றது. வீட்டு வன்முறை, திருமணத்துக்கு முன், திருமணத்துக்குபின்னரான வன்முறைச் சம்பவங்களே முறைப்பாடுகளாக

பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் இவ்வாறான முறைப்பாடுகள் உரிய சட்ட நடைமுறைகளின் பிரகாரம் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் விசாரணை செய்யப்பட்டு

அப் பிரச்சனைகளுக்குரிய தீர்வுகள் வழங்கப்படுகின்றன, என தெரிவித்தார்.

## கண்டி பாடசாலைகளுக்கு...

பாடசாலை குழுக்களிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய இந்தத் தீர்மானம் எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கண்டி நகர எல்லைக்குட்பட்ட 56 பாடசாலைகளையும் நாளை தொடக்கம் மூடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில்...

மற்றும் அவருடைய கடைக்கு அருகாமையில் தண்ணீர் விற்பனை கடையில் பணியாற்றும் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மூவரும் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றுவந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் இவர்களுடன் தொடர்பிலிருந்த அறுநூறு பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பரிசோதனையில் அடையாளம் காணப்பட்டவர்களில் ஏழு பேர் காங்கேசன்துறை கடற்படை முகாமினைச் சேர்ந்த கடற்படையினர் என்றும் கேதீஸ்வரன் அருவிக்குத் தெரிவித்தார்.

# மீண்டும் பயங்கரவாதம் உருவானால் தமிழ் தலைவர்களே பொறுப்பு



தமிழர்களின் உரிமைகள், தமிழர்களின் தேவைகள் குறித்து வாய் திறக்க இங்குள்ள தமிழ் தலைவர்கள் எவருக்கும் உரிமை இல்லை என இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நாட்டில் பயங்கரவாதம் ஒன்று தலைதூக்கினால் தமிழ் மக்கள் மத்தியில் விரோதத்தை ஊக்குவிக்கும் இவர்கள் அனைவருமே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், புலம்பெயர் அமைப்புகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள நாடகமாடும் இவர்களுக்கு எந்த மரியாதையும் கொடுக்க முடியாது என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சட்டத்தை மதிக்கும், சட்டதிற்கு கட்டுப்படும் சமூகமொன்றை உருவாக்க வேண்டும் என்பதே தமது அரசாங்கத்தின் நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பாதாள உலகக் கோஷ்டிகள், குடு வியாபாரிகளை இல்லாதொழிப்பதைப் போலவே அடிப்படைவாதிகள், பயங்கரவாதிகள் உருவாவதற்கும் தாம் இடமளிக்க மாட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மூன்று தசாப்த யுத்தத்தில் 27 ஆயிரத்திற்கு அதிமான இராணுவத்தை இழந்தும், பல்வாயிரம் வீரர்களை அங்கவீனர்களாக்கியும் இந்த நாட்டினை மீட்டெடுத்தாக சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு இருக்கையில் நாடாளுமன்றில் உள்ள ஒருசில தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள இனத்திற்கு எதிராகவும், தமிழ் மக்கள் மனங்களில் சிங்களவர் தொடர்பாக வெறுப்பையும், கோபத்தையும் வளர்க்கும் விதத்தில் மோசமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தமது பிரதேசங்களின் அபிவிருத்திகள், தேவைகள் குறித்து பேசாது எந்த வேளையிலும் சிங்கள மக்களுக்கும், இராணுவத்திற்கு எதிரான அவமான செயற்பாடுகளை உருவாக்கும் கருத்துக்களையே அவர்கள் முன்வைத்து வருவதாக சரத் வீரசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறான கீழ்த்தரமான தமிழ் அரசியல் வாதிகளின் மோசமான அரசியல் கருத்துக்களின் காரணமாகவே அன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேர்ந்தாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தாம் உலகில் மிக மோசமான பயங்கரவாதிகளை அழித்த இனம் எனவும் உலகில் வேறெந்த நாடுகளும் பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி கண்டதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இன்று சபையில் மனித உரிமைகள் பேசும் தமிழர் தரப்பு, அன்று 2002ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கை காலத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் இவர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், “யுத்த காலத்தில் தமிழர்களை நாமே காப்பாற்றினோம், அப்போதெல்லாம் இன்று பேசும் ஒருவரைக்கூட நாம் பார்க்கவில்லை. மூன்று இலட்சம் பொதுமக்களை பணயக்கைதியாக பிரபாகரன் வைத்திருந்த வேளையில் இவர்கள் எவருமே வாய் திறக்கவில்லை.

இரண்டு இலட்சத்து 95 ஆயிரம் தமிழர்களை பாதுகாத்துக்கொண்டே யுத்தத்தை முடித்தோம். உலகிலேயே மிகப்பெரிய மனிதாபிமான போராட்டத்தை முன்னெடுத்த இராணுவம் எமது இராணுவம் என்றே உலகம் கூறுகின்றது” என்று சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

## 100ஐ அண்மிக்கும் கொரோனா தொற்றாளர்களின் மரணங்கள்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த மரணங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது.

இதற்கமைவாக இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 94 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்களும் பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கினிகத்தேனை பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதான ஆண் ஒருவர், கடந்த 22ஆம் திகதி உயிரிழந்தார். சிறைச்சாலை வைத்தியசாலையிலிருந்து ராகம போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுடன் வயிற்றுப்போக்கு காரணமாக ஏற்பட்ட பல உறுப்புகளின் செயலிழப்பு அவரின் உயிரிழிப்பிற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், சியம்பலாபே தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 22 ஆம் திகதி உயிரிழந்தார்.

நீண்டநாள் நீரிழிவு நோயுடன் கொரோனா தொற்றக்கு உள்ளானதினால் நோய் அதிகரித்தமை அவரின் உயிரிழிப்பிற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 15ஐச் சேர்ந்த 73 வயதான பெண்ணொருவர் நேற்றைய தினம் உயிரிழந்தார். குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலிருந்து ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழிந்தார்.

உயிரிழிப்பிற்கான காரணம், அழற்சி மற்றும் கொரோனா நிமோனியா நிலைமையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரகம அட்டுலுகமை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான ஆண் ஒருவர், நேற்று உயிரிழந்தார். பாணந்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து ஐ.டி.எச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் உயிரிழந்தார்.

குறித்த நபர், கொரோனா தொற்றுக்கு உள்ளானதுடன் நாள்பட்ட கல்லீரல் நோய் மூளையை பாதித்தமை மற்றும் வீக்கம் ஏற்பட்டமை உயிரிழப்பிற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு மரணங்களுடன் இலங்கையில் கொரோனா நோயினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்துள்ளது.

## பிள்ளையானுக்கு பிணை வழங்க முடியும் என்றால் அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பிள்ளையானுக்கு பிணை வழங்க முடியும் என்றால் எந்தவித சாட்சியும் இல்லாது,

வெறுமனே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் 20 ஆண்டுகளாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்ட எமது தமிழ் இளைஞர்களை ஏன் பிணையில் விடுவிக்க முடியாது?”

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய மரபுரிமைகள், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,

இராஜாங்க அமைச்சகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

“சந்திரகாந்தன் எனும் பிள்ளையான் பயங்கரவாதத் தடைச் சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், அவர் சாட்சி இல்லாமல் சிறையில் இருந்துள்ளார் என்ற தர்க்கத்தை அரச தரப்பினர் முன்வைக்கின்றனர்.

இவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், எமது இளைஞர்கள் சாட்சிகள் இல்லாது வெறும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் 20 வருடங்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



அதனையும் அனைவரும் மறந்துவிடக்கூடாது. பிள்ளையானுக்குப் பிணை கொடுக்க முடியும் என்றால் 20 வருடங்களாக சிறையில் உள்ள எமது அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்தவர்களுக்குப் பிணை வழங்க முடியாது என அரச தரப்பினர் எம்மிடம் கூறினார்கள். அப்படியென்றால் பிள்ளையான் எவ்வாறு பிணையில் விடுதலையாக முடியும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் எமது தமிழ் இளைஞர்கள் பொய்க் குற்றச்சாட்டில் வெறுமனே குற்ற ஒப்புதல் சாட்சியங்களை வைத்துக் கொண்டு தடுத்து வைத்திருப்பது நியாயமானதா?

இது வெறுமனே அரசின் நிகழ்ச்சி நிரலில் நடைபெறும் செயற்பாடாகும். அரசை ஆதரித்த காரணத்தால்தான் பிள்ளையான் பிணையில் விடுதலையாகியுள்ளார்” - என்றார்.

## படகு விபத்தில் திருமலை மீனவர் பலி

திருகோணமலை-திருக்கடலூர் பகுதியில் இருந்து இன்று (25) அதிகாலை படகொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மீன்பிடிப்பதற்காக சிறிய படகொன்றின் மூலம் நான்கு பேர் கடலுக்குச் சென்றுள்ளதாகவும், அவர்களில் ஒருவரே குறித்த படகு விபத்தில் உயிரிழந்துள்ளதாகவும் காவற்துறையினர் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் திருகோணமலை- திருக்கடலூர் ஹர்தாஸ் வத்த பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவர் எனவும் காவற்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த மீனவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக காவற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.